Registered as a NewsPaper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம்: 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | பங்குனி 18 | ( 31 - 03 - 1992 ) | செவ்வாய்க்கிழமை | ஓசை: 42

## பரீட்சார்த்திகளை உறுதிப்படுத்த மாற்று ஒழுங்கு ஏற்பாடு

1991 விசேட கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை இல்லாத சந்தர்ப்பத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருப்பின் அதன்பற்றுச் சீட்டு அல்லது தபால் திணைக்களம் வழங்கும் அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டுபோன்றவற்றின்மூலம் பரீட்சார்த்திகள் தங்களை பரீட்சைக்கு தோற்றுவோர் என உறுதிப்படுத்த முடியும் என யாழ் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. இவ் விசேடபரீட்சை யாழ். மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மன்னார் மாவட்டங்களில் சுமார் 70 பரீட்சை நிலையங்களில் 9998 பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்குத் தோற்ற உள்ளனர். (பா)

### ஐலன்ட் தரும் திடுக்கிடும் தகவல்கள்

# இராணுவ அமைப்பில் கட்டுப்பாடு குலைவு

# புலிகளுக்கு பயந்து படையிலிருந்து ஓட்டம்

## தெற்கில் குற்றச்செயல்கள் அதிகரிப்பு 4000 பேரை தேடுகிறது பொலிஸ்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ அமைப்பில் கட்டுப்பாடும் ஒழுக்கமும் சீர்குலைந்து வருவதாகவும் வடக்கு - கிழக்கு யுத்தமுனைகளில் விடுதலைப்புலி வீரர்களுக்கு முகம்கொடுக்க அஞ்சி பல ஆயிரக்கணக்கில் படையினர் இராணுவத்திலிருந்து விலகி தலைமறைவாகியுள்ளதாகவும் பிரபல கொழும்பு ஆங்கில வாராந்த பத்திரிகையான "சண்டே ஐலன்ட்" ஒரு விசேட ஆய்வுக் கட்டுரையில் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் துணிகரமான தொடர்ச்சியான தாக்குதல்களினால் காலாட் படையின் முன்னணி பிரிவுகளுக்கு ஏற்பட்டுவரும் பாரிய உயிர்ச்சேதங்களே இராணுவத்தினர் மத்தியில் பெரும் மனத்தளர்வை ஏற்படுத்தியுள்ளது. இதனால் படையிலிருந்து விலகும் பெரும் எண்ணிக்கையிலான இராணுவத்தினர் தென்னிலங்கையில் சமூக விரோத குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இது அரசுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இவ்வாறு இந்த ஆய்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடத்தில், 3000—4000 வரையிலான இராணுவத்தினர் வரை தப்பி ஓடியுள்ளதாக பிரிகேடியர் ஒருவரை மேற்கோள் காட்டி ஐலன்ட் தெரிவிக்கின்றது. இதேவேளை, "ஒரு தடவை விடுமுறையில் செல்பவர்கள் மீண்டும் போர்க்களத்திற்குச் செல்ல விரும்பவில்லை என்பதே உண்மை" என தப்பி ஓடிய இராணுவத்தினரைத் தேடிவரும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இராணுவத்திலிருந்து விலகுவோர் தொகை மெதுவாக ஆனால் ஆபத்தானதாக உயர்ந்து வருவதாகவும், காலப்போக்கில் இவ்வாறு விலகியவர்களே பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறு...

...வில் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடுவதாக ஐலண்ட ஆய்வு குறிப்பிடுகின்றது விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் இராணுவத்தினரின் முன்னணிப் பிரிவிற்கு ஏற்படும் பலத்த உயிர் இழப்பே இதற்குக்காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இராணுவத்தில் இருந்து தப்பியோடிய இராணு...

## இராணுவத்தினர் மீது கடும் சோதனை

வவுனியா சிறிலங்கா இரா... உள்ள இராணுவத்தினர் பலர்...

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நாளை நியமனம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்கள் நாளை புதன் கிழமை வழங்கப்படவிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட கல்விப்பணிப்பாளர் கே. தியாகராஜா தெரிவித்துள்ளார்.

384 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்றும், நியமனம் பெறத் தகுதி பெற்ற தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் அன்றைய தினம் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, வாழைச் சேனை கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அழைக்கப்பட்டு நியமனக் கடிதங்கள் கையளிக்கப் படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

## ஆசிரியர் பற்றாக்குறை நீக்குமாறு கோரிக்கை

தீவகத்திலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து இப்பொழுது கெற்பலி 'பண்டிதர்' குடியிருப்பில் வசித்து வரும் குடும்பங்களிலுள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்கென அமைக்கப்பட்டுள்ள பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இப்பற்றாக்குறையை நீக்க குறைந்தது 15 ஆசிரியர்களாவது தேவை. ...டத்தில் கடமையாற்று ஆசிரியர்களைக் கொண்டு இப்பற்றாக்குறையை நீக்க உதவுமாறு இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் சழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வேண்டுகோள் யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கத்திற்கும், வேலணைக் கல்விக் கோட்ட பிரதிப்பணிப்பாளர் சி. புலேந்திரனுக்கும் விடுக்கப்பட்டுள்...

## ஏப்ரலில் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த சாதாரணதரப் பரீட்சைகளாகிய 90, 91 ஆகியவற்றின் பெறுபேறுகள் ஏப்ரல் மாதம் வரலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

இப் பெறுபேறுகளில் 91 பரீட்சையின் பெறுபேறு ஏப்ரல் முதலாம் கிழமையும் 90 பரீட்சையின் பெறுபேறு ஏப்ரல் இரண்டாம் கிழமையும் வரலாம் என எதிர்பார்க்கப் படுகிறது (பா)

## ஏப்ரல் 26 இல் புலமைப் பரிசில் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

கடந்தவருடம் தடைப்பட்டிருந்த ஆண்டு 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சை ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி நடைபெறும் என யாழ் பிராந்...

கெற்பலி 'பண்டிதர்' குடியி
ருப்பில் வசித்து வரும் குடும்
பங்களிலுள்ள மாணவர்கள்
கல்வி கற்பதற்கென அமைக்
கப்பட்டுள்ள பாடசாலையில்
ஆசிரியர் பற்றாக்குறை நிலவு
கிறது. இப்பற்றாக்குறையை
நீக்க குறைந்தது 15 ஆசிரியர்க
ளாவது தேவை.
வேலணைக் கல்விக் கோட்

நலன் காக்கும் கழகம் வேண்டு
கோள் விடுத்துள்ளது.
இந்த வேண்டுகோள் யாழ்
மாவட்ட கல்விப்பணிப்பாளர்
இ ரா. சுந்தரலிங்கத்திற்கும்,
வேலணைக் கல்விக் கோட்ட
பிரதிப்பணிப்பாளர் சி. புலேந்
திரனுக்கும் விடுக்கப்பட்டுள்
ளது. (ச)

# தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையான கண்டனம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்திலுள்ள
ஆசிரியர்கள், அதிபர்களுக்கு
நேற்றுவரை சம்பளம் வழங்
கப்படவில்லை ஆனால் பணி
ப்பாளர் உட்பட சகல மாவ
ட்ட, கோட்டக் கல்வி அலு
வலக ஊழியர்கள்வரை சகல
ருக்கும் சம்பளம் வழங்கப்பட்
டுள்ளமையை இலங்கைத் தமி
ழர் ஆசிரியர் சங்கச் செயலா
ளர் வன்மையாகக் கண்டித்
துள்ளார். திணைக்களம் இவ்
வாறு பாகுபாடு காட்டுவது
வருந்தத்தக்கது எனவும்
மேலும் தாமதமில்லாது சம்
பளம் வழங்க நடவடிக்கை
எடுக்குமாறும் திணைக்கள
த்தை பொதுச் செயலாளர்
வலியுறுத்தியுள்ளார்.

வரை மேற்கோள்காட்டி

செல்ல விரும்பவில்லை என

# இராணுவத்தினர் மீது கடும் சோதனை

வவுனியா சிறிலங்கா இரா
ணுவ முகாம்களிலிருந்து லீவு
பெற்றுச்செல்லும் இராணுவச்
சிப்பாய்களைச் சோதனை
செய்யும்நடவடிக்கையில் இரா
ணுவம் ஈடுபட்டுள்ளது.
வவுனியா எல்லைப்புறப்
பகுதிகளிலும் நகரப் பகுதி
களிலும் உள்ள முகாம்களில்
லீவு பெற்றுத் தென் பகுதி
நோக்கிச் செல்லும் இராணு
வச் சிப்பாய்கள் அனைவரும்
ஈரற்பெரியகுளம் இராணுவ
முகாம் பகுதியில் வைத்துக்
கடுமையான சோதனைக்கு
உட்படுத்தப்படுகின்றனர்
என்று தெரிவிக்கப்பட்டது.
மேற்படி பகுதி முகாம்களில்
உள்ள இராணுவத்தினர் பலர்
அதிகாரிகளுக்குத் தெரியமல்
தலைமறைவாகி வருவதை
அடுத்தே புதிதாக இராணுவ
அதிகாரிகள் இச்சோதனை
நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள
னர் என்று அறியப்பட்
டது. (தி)

இராணுவத்திலிருந்து ...
வோர் தொகை மெதுவாக
ஆனால் ஆபத்தானதாக உயர்
ந்து வருவதாகவும், காலப்
போக்கில் இவ்வாறு விலகிய
வர்களே பாதுகாப்பிற்குப்
பெரும் அச்சுறுத்தலாக மாறு
வார்கள் என ஓர் உயர் இரா
ணுவ அதிகாரி தெரிவித்துள்
ளார்.
வடக்கு-கிழக்குப் போர்
முனையில் ஈடுபடுத்தப்பட்ட
காலாட் படையினரின் முன்
னணிப் பிரிவினரே பெருமள
முன்னணிப் பிரிவிற்கு ஏற்ப
டும் பலத்த உயிர் இழப்பே இதற்
குக்காரணம் எனவும் தெரிவிக்
கப்பட்டுள்ளது.
தற்பொழுது இராணுவத்தில்
இருந்து தப்பியோடிய இராணு
வத்தினரைத்தேடி கண்டுபிடிப்
பதில் இராணுவப் பொலிஸா
ரும், பொலிஸாரும் ஈடுபட்
டுள்ளனர். தப்பியோடிய
இராணுவத்தினரில் நூற்றுக்
கணக்கானோர் சமூக விரோ

[4 ஆம் பக்கம் பார்க்க]

டிருந்த ஆண்டு 5 இற்கான
புலமைப்பரிசில் பரீட்சை ஏப்
ரல் மாதம் 26 ஆம் திகதி
நடைபெறும் என யாழ் பிராந்
திய கல்விப்பணிப்பாளர் இ.
சுந்தரலிங்கம் தெரிவித்துள்
ளார். (பா)

# இன்றைய போட்டிகள்

யாழ். மாவட்ட விளையா
ட்டு அபிவிருத்திக் குழுவினால்
நடாத்தப்படும் வலைப்பந்தா
ட்டப் போட்டியில் வலிகாமம்
கிழக்குப் பிரிவுக்கான இன்
றைய போட்டியில் யுத்காமல்
அணியை எதிர்த்து சென்அன்
ரனீஸ் ''ஏ'' அணி மோதும்
இப்போட்டி மாலை 3.00
மணிக்கு ஆரம்பமாகும். மற்று
மோர் போட்டியில் அரியாலை
ஐக்கிய ''பி'' அணியை எதிர்
த்து சென்மேரிஸ் நீல அணி
மோதும் இப்போட்டி மாலை
4.30 மணிக்கு நடைபெறும்.
மேற்படி போட்டிகள் யாழ்.
சம்பத்தரிசியார் கல்லூரி
மைதானத்தில் நடைபெறும்.

# புலிகளின் துணிவு, ஒழுக்கம்; இராணுவ தளபதி உபதேசம்

[கொழும்பு]
போர் முறையில் நன்றாகப்
பயிற்றப்பட்ட புலிகளிடம்
குடிப்பழக்கம் இல்லை அவர்
கள் புகைப்பதில்லை, கொள்
ளையடிப்பதில்லை, களவெடுப்
பதில்லை, மற்றும் பெண்ணா
சையும் இல்லை அவர்கள்
துணிவு, கட்டுப்பாடு என்ற
உள்ளுணர்வுடன் போராடு
கிறார்கள்.
— இவ்வாறு இராணுவத்
தளபதி லெப். ஜெனரல் சிசில்
வைத்திய ரெட்னா கைநூல்
ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்
இந்தப் பண்புகளை உள்ள
டக்கிய புலிகள் ஒரு இலக்
கினை அடைவதற்கான தந்தி
ரோபாயத்தை கையாளுகிறார்
கள் என்றும் கைநூலில் குறிப்
பிடப் பட்டுள்ளது.
புலிகள் ஓர் உள்ளுணர்வுடன்
போராடுகிறார்கள் என்பதை
ஒப்புக்குக் கொள்ளும் அவர்
படைகளுக்கு எதிரிகளை விட
கூடுதலான உள்ளுணர்வு இருக்க
வேண்டும் என்றும், புலிகளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தை உடன் நிறுத்துக அரசிடம் ஆயர்பீடம் கோரிக்கை

[கொழும்பு]
இலங்கையில் அரசு படைக
ளுக்கும் புலிகளுக்குமிடையில்
நடைபெறும் யுத்தம் உடன்
நிறுத்தப் பட வேண்டும்என்று
இலங்கை றோமன் கத்தோ
லிக்க சமய பீடம் அரசாங்கத்
திடம் கோரிக்கை விடுத்துள்
ளது.
அண்மையில் யாழ்ப்பாணத்
துக்கு நல்லெண்ண விஜயம்
ஒன்றை மேற்கொண்டிருந்த
கத்தோலிக்க சமயத்துறவிகள்
குழு, வடக்கில் உணவு மற்றும்
மருத்துவம் பற்றாக்குறை
நிலவுவதையும், பலரும் உடல்
நலிவோடு காணப்படுவதாக
வும், குழந்தைகள் பெண்கள்
ஆண்கள் எல்லோரும்
நீடித்துச்செல்லும் போரினால்
மனம் அயர்ந்து காணப்படுவ
தாகவும் தெரிவித்துள்ளது.
இருதரப்பிலும் மனித உயிர்
கள் அநியாயமாகப் பறிபோவ
தையும்கத்தோலிக்க துறவிகள்
குழு கொழும்பில் வெளியிட்ட
அறிக்கையில் சுட்டிக் காட்டி
யுள்ளது.

# பூநகரி பகுதியில் பலத்த விமானக்குண்டுவீச்சு பல வீடுகள் சேதம்

(பூநகரி)
பூநகரிப் பகுதியில் நேற்று
முன்தினம் சிறிலங்கா விமானப்
படை விமானங்கள் குண்டு
வீச்சு தாக்குதல்களை மேற்
கொண்டன. பகல் 9-30 மணி
தொடக்கம் 12மணி வரை இத்
தாக்குதல்கள் மேற்கொள்ளப்
பட்டன. இதனால் பொதுமக்
களின் பல வீடுகள் சேதமடைந்
துள்ளன.
செட்டியா குறிச்சிப் பகுதி
யில் அவ்ரோ விமானம்
ஒன்று மூன்று குண்டுகளை
வீசியது. இக் குண்டுவீச்சினால்
பல வீடுகள் சேதமடைந்துள்
ளன.
4ஆம் கட்டைப் பகுதியில்
அவ்ரோ விமானம் 4குண்டு
களை வீசியது இதனால்
சேவியர் என்பவரது
வீடு முற்றாக சேதமடைந்தது.

# அன்னை பூபதி நினைவாக நினைவஞ்சலிக் கூட்டமும் உண்ணாவிரதமும்

தியாகச்சுடர் அன்னை பூபதி
யின் நினைவாக நினைவஞ்ச
லிக் கூட்டமும் அடையாள
உண்ணாவிரதமும் இன்று
தென்மராட்சிப் பிரிவில் இத்
தாவில் முருகன் கோயிலில்
இடம்பெறவுள்ளது
உண்ணாவிரதம் காலை 8
மணி தொடக்கம் பிற்பகல் 4
மணிவரை நடைபெறும். பிற்
பகல் 7 மணிக்கு நினைவஞ்
சலிக் கூட்டம் ஆரம்பமாகும்.
இந்தக் கூட்டத்தில் புரட்சி,
ஜவான், கடாபி மாஸ்ரர்,
இளவேணி ஆகியோர் கலந்து
கொண்டு உரையாற்றுவர்.
அதனைத் தொடர்ந்து கலை
நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்
ளன.

# தேசத்துரோகிகளை எமது தாயகம் மன்னிக்காது

தேசத்துரோகிகளை எமது
தாயகம் மன்னிக்காது என்ற
தலைப்பில் தமிழீழவிடுதலைப்
புலிகளின் தலைமைச் செயல
கம் விடுத்துள்ள துண்டுப்பிரசு
ரமொன்றில் முனுசாபயோ
செப், இராமையா இராமலிங்
கம், தி தாமோதரம்பிள்ளை,
சொ. பேரின்பநாயகம், சி.செல்
லையா ஆகியோர் தொடர்
பான குற்றச்சாட்டுக்களும்,
தண்டனைகளும் பற்றி விளக்
கப்பட்டுள்ளது. அப் பிரசுரத்
தின் முழு விபரமும் வருமாறு.
தமது வியாபார நலன்களுக்
காகக் கூட்டுப்படைத் தலை
மையகத்துடன் தொடர்புகளை
ஏற்படுத்திக்காட்டிக்கொடுப்பு
நடவடிக்கைகளில் ஈடுபட்ட
திரு. முனுசாமியோசேப்
(வயது 33 கனகாம்பிகைக்
குளம், கிளிநொச்சி). வவுனியா
இராணுவத்துடன் தொடர்பு
களை ஏற்படுத்திக் காட்டிக்
கொடுப்பு நடவடிக்கைகளில்
ஈடுபட்ட திரு இராமையா
இராமலிங்கம் (வயது 41,
நெளுக்குளம், வவுனியா).
கொள்ளை, பாலியல் வன்
முறை போன்றசமூகவிரோதச்
செயல்களில் ஈடுபட்டு வந்
துள்ள திரு. தம்பன் செல்லத்
தம்பி (வயது 42, துன்னாலை
தெற்கு, கரவெட்டி). ஆகியோ
ரது விசாரணைகள் பூர்த்தி
யாகியுள்ளன.
தமிழினத் தேசத்துரோகி
யாகிய அல்பிரட் துரையப்பா

[4 ஆம் பக்கம் பார்க்க]

# யாழ்.செயலகத்தில் தனியார்வர்த்தகர்களுக்கு உணவுபொருள் விநியோகம்

யாழ். மாவட்டத் தனியார்
வர்த்தக நிலையங்களுக்கு அத்
தியாவசியப் பொருள்களைக்
கட்டுப்பாட்டு விலைக்கு வழ
ங்க யாழ் செயலகப் புனர்
வாழ்வுப் பிரிவு தீர்மானித்துள்
ளது.
கடந்த ஒருவருடமாக அரிசி,
மா போன்ற அத்தியாவசிய
உணவுப்பொருள்கள் தனியார்
வர்த்தகர்களுக்கு வழங்கப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**SPOKEN ENGLISH**
**ENGLISH GRAMMAR**

ஆங்கிலத்தில் பேசப்பழக்குதல் 3 மாதப்பயிற்சி 1-4-92 ல் ஆரம்பமாகிறது (எழுத்து வாசிப்பு உட்பட) V.N. KANDASAMY A.I.B Part-I (LONDON) INTER (LONDON) 87, திருநெல்வேலி றோட். கொக்குவில் (2347)


## வணசிங்கா நினைவுப் பேருரை

[கோப்பாய்]

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் தலைவர் அமரர் டொ. சை. க. வணசிங்கா அவர்களின் நினைவுப் பேருரை இன்று பி. ப. 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் த. மகாசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மருதனாமடம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் வணசிங்காவின் உருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைப்பார். யாழ். பல்கலைக்கழக விலங்கியற்துறைத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் ''போர்க்காலச் சூழலில் சூழல் பாதுகாப்பு'' என்னும் பொருள் பற்றி நினைவுப் பேருரை நிகழ்த்துவார். மூத்த ஆசிரியாளர் க. சின்னத்தம்பி தொடக்கவுரை வழங்குவார்.

## அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர் [illegible]த்தினரால் அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று நிகழ்த்தப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று மாலை 2.00 மணிக்கு இந்த நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு மேற்படி கழகம் கேட்டுள்ளது.

## புதிய விமானங்கள் தென்னாசியாவில் தேவை

# மக்கள் மத்தியில் புலிகள் உள்ளனர்; பிரித்து விடுதல் இயலாத காரியம்

''தமிழ் மக்களின் அபிலாசைகளுக்காக மக்களின் மத்தியில் நின்று போராடிக் கொண்டிருக்கும் குழு என்ற வகையில் விடுதலைப் புலிகளை மக்களில் இருந்து பிரித்து இனம் காண்பதென்பது கடினமாகவே இருக்கும்'' என இ. தொ. கா. தலைவர் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

'வீரகேசரி பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலே' விடுதலைப்புலிகள் - தமிழ் மக்கள் இரண்டுக்குமிடையில் வித்தியாசம் இருப்பதாக நீங்கள் கூறுவதில்லை. அதற்கான காரணங்களை கூறமுடியுமா? எனக் கேட்டபோதே இவ்வாறு பதிலளித்தார்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை முன்னெடுத்துச்சென்று அதற்கான தீர்வை அடைந்து கொள்ள பல்வேறு இயக்கங்கள் கடந்த காலங்களில் செயற்பட்டு வந்துள்ளன.

ஆரம்பத்தில் தமிழ் காங்கிரஸ், பின் தமிழரசுக்கட்சி அதன் பின் தமிழர் விடுதலைக் கூட்டணி என்று தொடர்ந்து வந்து தற்போது இளைஞர்கள் தலைமையிலான இயக்கங்கள் இதற்காகச் செயற்படுகின்றன. இளைஞர் தலைமையிலான இயக்கங்களில் கூட விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனையவை ஈழம் கோரிக்கையை கைவிட்ட நிலையில் வேறு வழிக்குத் திரும்பியுள்ளன.

விடுதலைப் புலிகளை ஒழித்து விடுவதன் மூலம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்றும் எதிர்பார்க்க முடியாது ஏனெனில் தமிழர்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படாத வரை தமிழ் மக்கள் இருக்கும் வரை இத்தகைய இயக்கங்கள் இருப்பது தவிர்க்க முடியாததாகும்.

இன்றைய போக்கில் விடுதலைப் புலிகள் இல்லை என்றாலும்கூட இன்னொரு இயக்கம் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றுவது தவிர்க்க முடியாதது, எனவே நான் தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டுமென கூறுகிறேன். தமிழர் பிரச்சினைகளுக்கு உரிய முறையில் பரிகாரம் காணப்பட்டால் விடுதலைப் புலிகள் போன்ற இயக்கங்களுக்கு வேலை இருக்காது என்று தெரிவித்தார்.

பேட்டியின் விபரம் வருமாறு:



தொண்டமான்

**கேள்வி:**

பாராளுமன்றத் தெரிவுக் குழு எவ்வளவு காலத்திற்குள் தீர்வை முன்வைக்கும் என எதிர்பார்க்கிறீர்கள்?

**பதில்:-**

தெரிவுக் குழு மீண்டும் அடுத்தமாதம் 21 ஆம் திகதி கூட இருக்கின்றது. மே மாத நடுப்பகுதியில் அல்லது யூன் மாதத்தில் தீர்வுக்கான யோசனைகளை முன்வைக்குமென எதிர்பார்க்கலாம். தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்போரின் செயற்பாடுகளிலேயே இது தங்கியுள்ளதெனலாம்.

**கேள்வி;-**

பாராளுமன்ற தெரிவுக்குழு வழங்கப்போகும் சிபார்சுகள், ஏற்கனவே நீங்கள் சமர்ப்பித்த யோசனைகளை விட குறைந்த அம்சங்களையே கொண்டிருந்தால் அதன் பிறகு உங்கள் செயற்பாடு என்னவாயிருக்கும்?

**பதில்;-**

இதுபற்றி முன்கூட்டியே பதில் கூற முடியாது. வேளை வரும்போது அதுபற்றி யோசிக்கலாம். எனினும் ஒரு விடயத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இதுவரை எத்தனையோ பேச்சு வார்த்தைகள், சமாதான தூதுக்கள் இடம்பெற்றுள்ளன இவ்வாறு நடைபெற்ற போது விடுதலைப் புலிகள் தமது ஈழக் கோரிக்கையைக் கைவிட்டதாக இதுவரை அறிவிக்கவில்லை. பேச்சு வார்த்தைகளும், சமாதான தூதுக்களும் தான் மாறி மாறி நடைபெறுகின்றதே ஒழிய அவர்கள் தமது ஈழக்கோரிக்கையை கைவிட்டதான அறிவிப்பு இதுவரை வந்ததாகத் தெரியவில்லை என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

எனவே முன் வைக்கப்படும் தீர்வு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக ஈழக்கோரிக்கைக்கு மாற்றீடாக அமைய வேண்டும். அதன் மூலமே விடுதலைப் புலிகள் போன்றஇயக்கம் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அதே வேளையில் புலிகள் பிரச்சினைக்குள், பெரும் நெருக்கடிக்குள் இருக்கின்றனர். இதனைச் சாதகமாகக் கொண்டு அவர்களை வழிக்குக் கொண்டு வந்து விடலாம். தீர்வை சுமத்தி ஏற்றுக்கொள்ளச் செய்து விடலாம் என்றெல்லாம் கருத்து நிலவுகின்றது இது சாத்தியமாகக் கூடிய தொன்றல்ல.

**கேள்வி:**

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக பிரபாகரன் இந்திய அரசாங்கத்தினால்தேடப்படுகின்றார். இவ்வாறான நிலையில், பிரபாகரனுடன் இலங்கை அரசு பேச்சு வார்த்தைநடத்துவதற்கான வாய்ப்பு எப்படி ஏற்படும்?

**பதில்:**

இன்றுள்ள பிரச்சினை தனிநபர் பிரச்சினையல்ல தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதுவே முக்கிய பிரச்சினையாக உள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் பதினான்கு மாதங்கள் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன இப்பேச்சு வார்த்தை பிரபாகரன் இன்றியே நடைபெற்றது.

எனவே மீண்டும் ஒரு பேச்சு வார்த்தை தொடங்குவதாயின் இவை எல்லாம் தடையாக இருக்க நியாயமில்லை தனிநபரை விட சமூகம் முக்கியம் என்ற வகையில் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கவோ தொடரவோ முடியும்.

**கேள்வி:**

மலையகத்தில் புலிகள் என்ற பிரசாரமும் கைது செய்யப்படுவதும் நடக்கின்றனவே? இது எந்தளவிற்கு உண்மையானது?

**பதில்:**

மலையகத்தில் புலிகள் என்பதெல்லாம் வெறும் கட்டுக் கதைகள். இந்திய வம்சாவழி மக்கள் தமது உரிமைகளை அனுபவிக்க கூடாது அவர்கள் தொடர்ந்தும் பின் தங்கிய நிலையிலேயே இருக்க வேண்டுமென தொடர்ந்தும் எதிர்பார்க்கும் சில சக்திகளின் செயற்பாடுகளே இவையன்றி வேறில்லை.

இவ்வாறான பிரசாரங்கள் காலம் காலமாக நடைபெற்று வருகின்றன எமது மக்கள் இவற்றைக்கண்டு பயமோ அதிர்ச்சியோ அடையாது இவைகளுக்கு இடங்கொடுக்காது தமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளவேண்டும் என நான் அவர்களை கேட்டுக்கொண்டுள்ளேன்.

## தந்தை செல்வாவின் 94 ஆவது பிறந்த தினம்



தந்தை செல்வநாயகத்தின் 94 வது பிறந்த தினம் இன்றாகும் இதனையொட்டி அவர் ஆற்றிய உரைகளில் இருந்து ஒருசிலவற்றை இங்கு தருகின்றோம்.

★ ''தமிழ்பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாங்கள் ஒருகாலத்தில் கூட்டாட்சி இயக்கத்தை ஆரம்பித்தோம். ஆனால் கூட்டரசு மூலம் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவது சாத்தியப்படாது என்பதை கடந்த கால அனுபவங்களின் மூலம் இப்போது நாம் அறிந்து கொண்டோம்''

இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியே பிரிந்து வாழ வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்து விட்டோம். இதை நாம் செய்யாவிட்டால் தமிழினம் தமது உரிமைகளை ஒருபோதும் மீட்டுக் கொள்ள முடியாது. எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தனர். அவர்கள் தங்களுக்கெனத் தனியாட்சி வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் எங்களுக்கென ஓர் இடம் இருக்கிறது. எங்கள் இயக்கம் நாட்டைப் பிரிக்கும்படி கோரவில்லை இழந்த உரிமையான அரசை மீள அமைக்க வேண்டும் என்பதே எங்கள் நிலையாகும்.

தனித்தமிழ் ஈழத்தை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எங்கள் இயக்கம் முன்னேறுகிறது. தனிஈழம் நிறுவுவது சுலபமான காரியமல்ல என்பதும் மிகவும் கடினமானதென்பதும் எங்களுக்குத்தெரியும். எமக்குள்ள நிலை இரண்டு நாம் ஒன்றில் சிங்களவர்களின் அதிகாரத்துக்குள்ளிருந்து விடுபட்டு வெளியேறவேண்டும். அல்லது அழிந்து போகவேண்டும், எனவே நாங்கள் போராடித் தனித் தமிழ் ஈழத்தை நிறுவியே தீருவோம். நாங்கள் கூட்டாட்சிக் கோரிக்கையை அடியோடு கைவிட்டு விட்டோம்.''

— 9. 11. 76 இல் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய கடைசி உரை.

★ ''எமது தலைமுறையில் கைகூடா விடினும் நாம் இப்போரை நடத்தி எமக்குப் பின்வரும் சந்ததியினர் கையிற்கொடுப்பது எமது கடன் எம்பின்னே அரும் பெரும் வீரர்களை எம்மினம் பெறக்கூடும். குறைந்த பட்சத்தில் அவர்களுக்கு அணிவகுப்பவர்களாகவாவது நாம் இருப்போமாக.''

— தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாட்டுத் தலைமையுரையில் (14-4-50)

## யாழ். புனித சாள்ஸ் ஆசிரியைக்கு முதலிடம்

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள ஆறு கோட்டங்களையும் சேர்ந்த ஆசிரியர்களுக்கிடையேநடைபெற்ற ஓவியப் போட்டியில் யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலய ஆசிரியை செல்வி பமிலா பெர்னாண்டோ 'அகதி முகாம்' என்ற ஓவியத்திற்கு முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்

செல்வநாதன் 'நளன் தமயந்தியைப் பிரிதல்' என்ற ஓவியத்திற்கு இரண்டாம் இடத்தையும் ஏழாலை மகா வித்தியாலய ஆசிரியர் ஆர். சூரியகுமார் 'அகதி முகாம் என்ற ஓவியத்திற்கு மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார். இந்த முடிவுகளை யாழ். கல்வித் திணைக்கள பிரதிப் பணிப்பாளர்

## யுத்தத்திற்கு ஆண்டுதோறும் செலவு ரூபா 2500 கோடி

## தொண்டர்ஆசிரிய நியமனம் இழுத்தடிப்பு நியாயமற்றது

(யாழ்ப்பாணம்)

அறியத்தருகிறோம்.

யாவர்கள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு மேற்படி கழகம் கேட்டுள்ளது.

## புதிய விமானங்கள் தென்னாசியாவில் சேவை

(கொழும்பு)

ஏயர் லங்கா புதிதாக பெற்றுக் கொண்ட போயிங் 737 - 300 விமானத்தை இந்திய உபகண்டத்தில் சேவையில் ஈடுபடுத்துகிறது.

சிறிது காலத்திற்கு முன்னர் சென்னையில் இறங்குகையில் சேதமடைந்த 737 விமானத்தின் இடத்தை இது பிடித்துக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய விமானம் 149 சிக்கன ஆசனங்களைக் கொண்டது.

## சேவை நலம் பாராட்டு

காரைநகர் கொத்தணிப் பாடசாலையில் அதிபர்களாகக் கடமையாற்றிய ஓய்வு பெற்ற ஏழு அதிபர்களினதும் பதவியுயர்வு பெற்ற இரு அதிபர்களினதும் சேவை நலம் பாராட்டு விழா, அண்மையில் விக்டோரியா கல்லூரியில் நடைபெற்றது. காரைநகர் கொத்தணியின் பிரதிக் கொத்தணி அதிபர் எஸ். கே. சதாசிவம் தலைமையில் நடைபெற்றஇவ்விழாவில் உதவிக் கல்விப்பணிப்பாளர் மு. திருநீலகண்டசிவம் உட்பட பலர் கலந்து கொண்டு அதிபர்களின் சேவையை பராட்டிப் பேசினர்.

உயர்
கலைக் கல்லூரி
ஆனைப்பந்தி

பேராதனை பல்கலைக் கழக G. A. Q 92 / 93 மாணவர்கள் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் வந்துள்ளன. பதிவதற்கான இறுதித் திகதி:- 05. 04. 92

(சி/4116) பதிவாளர்

தலைப் புலிகள் இல்லை என் … பித்த யோசனைகளை விட … இலங்கை அரசு பேச்சு வார்த் … கேட்டுக்கொண்டுள்ளேன்.

யுத்தத்திற்கு

## ஆண்டுதோறும் செலவு ரூபா 2500 கோடி

வடக்கு, கிழக்கு யுத்தத்திற்கு ஆண்டு தோறும் 2500 கோடி ரூபாய் செலவாகிறது. யுத்தம் இந்த ஆண்டிற்குள் முடிவுக்கு வந்து விடும் என்று சிறிலங்காவின் பிரதமரும், நிதி அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமாகிய டி. பி. விஜயதுங்கா குறிப்பிட்டுள்ளார்.

உடுகம்பொல பிரதேச 'கம் உதாவ' நிறைவு வைபத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே டி. பி. விஜயதுங்க இதனைத் தெரிவித்தார்.

## கம்பியூட்டர் அமைப்பு கனடா உதவி

(கொழும்பு)

கனடாவைச் சேர்ந்த சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனம் ஒரு சாதாரண கம்பியூட்டர் மயமாக்கப்பட்ட அமைப்பு ஒன்றை இலங்கைக்கு வழங்க இணங்கியுள்ளது. இது ஒரு தகவல் வழங்கும் அமைப்பாகவும், பெறப்படும் தகவல்களை ஒருங்கிணைக்கவும்பயன்படும்.

கிராமம் ஒன்றிலிருந்து பெறப்படும் தகவல்களைத் திரட்டி ஒருங்கிணைக்கவும் முகாமைத்துவ திட்டமிடலுக்கும் பயன்படத்தக்கது. இக் கம்பியூட்டரைக் கொண்டு பரீட்சார்த்த திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 15,000 கனேடிய டாலருக்கு பாஸ் போட் விற்பனை

### கனேடிய அதிகாரி தகவல்

(கொழும்பு)

போலியான கனேடியக் கடவுச்சீட்டு ஒன்று பதினையாயிரம் டாலர் வரையான விலைக்கு விற்கப்பட்டதாக ஏண்டாரியோ நீதிமன்றத்தில் கனேடியப் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கனடாவில் கடவுச்சீட்டு மோசடி செய்தமை தொடர்பாக கைது செய்யப்பட்ட இரு தமிழர்கள் மீதான வழக்கு ஏண்டாரியோ நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

குமாரசுவாமி சாந்தகுமார், சபாநாயகம் லோகநாதன் என்னும் இருவரும், அகதிகளாக கனடாவில் புகுந்த இவர்கள், கனடாவுக்கு இலங்கைக்கு தமிழர்கள்பலரை அகதிகளாக அழைத்துச் செல்ல மோசடிகள் செய்ததாக அப்பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

## கொழும்புசெல்லதெரிவான நோயாளர் சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து கொழும்புக்கு சிகிச்சைக்கு செல்வதற்கு தெரிவு செய்யப்பட்ட நோயாளிகளை ஏப்ரல் 2ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7மணியளவில் சகலபிரயாணஒழுங்குகளுடனும் யாழ். போதனா வைத்திய சாலைக்கு சமுகந்தருமாறு வேண்டப்படுகின்றார்கள். (பா)

## தொண்டர்ஆசிரிய நியமனம் இழுத்தடிப்பு நியாயமற்றது

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப்பகுதிகளில் கல்வி மேம்பாட்டுக்கு பெரிதும் உழைத்து வரும் தொண்டர் ஆசிரியர்களினது நியமனங்களை இழுத்தடிப்பது நியாயமற்றதாகும். அற்ப காரணங்களைக் கூறி இவர்களது போராட்டத்தைத் தவறு என்பதும், நிர்வாக நடைமுறைகள் சீர்குலைகின்றன. என்று கூறுவதும் அநீதியானதே என்று இடம்பெயர்ந்த தீவக தனியார்-பொதுத்துறை ஊழியர் சங்கம் தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆதரவு தெரிவித்து அதன் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

தங்களது சாத்வீகமான போராட்டம் நியாயமானது. தங்கள் போராட்டத்துக்கு எமது சங்கம் பூரண ஆதரவு தருவதுடன் தாங்கள் எடுக்கும் எவ்விதமான நடவடிக்கைகளுக்கும் எமது பூரண ஒத்துழைப்பு இருக்கும் என்பதைத் தங்களுக்குப் பகிரங்கமாக அறியத்தருகிறோம்.

எமது தீவகப் பகுதியைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர் பலர் 23.03.1984 முதல் இன்று வரை மாதாந்தம் 50ரூபா மட்டும் வேதனம் பெற்றுத் தொண்டரடிப்படையில் சேவைசெய்வதை நாம் அறிவோம். இவர்கள் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய காலப் பகுதியில் கற்பித்ததோடு நில்லாது சாரணியம், கலைநிகழ்ச்சிகள் போன்ற இணைபாடவிதான செயற்பாடுகளிலும், அலுவலகவேலைகளிலும் உதவிவருவதாக நாம் அறிவோம் என்றும்,

இவர்களது நியமனங்களை உடனடியாக வழங்க வேண்டும். இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுவதற்கான போராட்டத்தில் நாமும் இணைந்து கொள்வோம் என்று எமது சங்கம் ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீவுக்கு கல்விப்பணிப்பாளர் மாகாணஅமைச்சுநியமனம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கல்வி நிர்வாகச் சேவை தரம் மூன்றைச் சேர்ந்த ஆர். சின்னத்தம்பி தீவகப் பகுதி பாடசாலைகளுக்கு பொது மற்றும் கல்வி நிர்வாக இணைப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம்உடனடியாகச் செயற்படும் என்று மாகாண அமைச்சின் கல்விப்பணிப்பாளர் செல்வி ரி. பெரியதம்பி நியமனக் கடிதத்தில்தெரிவித்துள்ளார். கடிதத்தின் பிரதி யாழ் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

உடனடியாகக் கடமையைப் பொறுப்பேற்று நிர்வாகத்தை வழமைக்குக் கொண்டு வர தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும்ஆர்.சின்னத்தம்பிக்கும் பணிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை மத்திய அமைச்சின் பணிப்புரையின் பேரில் மருதனாமடக் கோட்டக் கல்விப் பிரதிப்பணிப்பாளர் இ. சிவானந்தன் இதே பொறுப்புக்கு ஏற்கனவேயாழ் கல்விப்பணிப்பாளர் இடமாற்றம் செய்திருந்தார்.

இ. சிவானந்தன் தீவகம் சென்று கடமையைப்பொறுப் பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தீவகத்துக்கு ஒருவர் இப்போது மாற்றப் பட்டுள்ளதால் இ சிவானந்தனின் மாற்றம் ரத்தாகலாம் என்று கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள ஆறு கோட்டங்களையும் சேர்ந்த ஆசிரியர்களுக்கிடையேநடைபெற்ற ஓவியப் போட்டியில் யாழ். புனித சான்ஸ் மகா வித்தியாலய ஆசிரியை செல்வி பமிலா பெர்னாண்டோ 'அகதி முகாம்' என்ற ஓவியத்திற்கு முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆசிரியைதிருமதிமோமதி செல்வநாதன் 'நளன் தமயந்தியைப் பிரிதல்' என்ற ஓவியத்திற்கு இரண்டாம் இடத்தையும் ஏழாலை மகா வித்தியாலய ஆசிரியர் ஆர். சூரியகுமார் 'அகதி முகாம் என்ற ஓவியத்திற்கு மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார். இந்த முடிவுகளை யாழ். கல்வித் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் இ. சிவானந்தன் வெளியிட்டார்.

நினைவு கூருகின்றோம்...

1992. 03. 31

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டக்களப்பு வந்தாறுமூலைப்பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

விமல் (விமல்ராஜ் - கொம்மாந்துறை மட்டக்களப்பு)

ஸ்ரார் (வா. பொன்னம்பலம் - கல்வயல் சாவகச்சேரி)

1987 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் எதிர்பாராத விதமாக எமது பொறி வெடியில் சிக்கியதில் எம்மைப் பிரிந்த

குட்டி (இராசையா இராசரட்ணம் - கம்பர்மலை வல்வெட்டித்துறை)

ரதன் (காங்கேஸ் திலகேஸ்வரன் சாமியன் அரசடி முடக்காடு, கரவெட்டி மேற்கு)

1989 ஆம் ஆண்டு இரணைமடுவில் இந்தியப்படையினருடனான மோதலின்போது காயமுற்று யாழ்மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் போது தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்ட

டில்லி கணேஸ் (சின்னையா கணேசன் - நுணாவில் மேற்கு)

மட்டக்களப்பில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட வந்தாறுமூலை வாசியான தமிழ்ப் பொதுமகன்

கோப்பாயில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட கட்டைப்பிராய் ப. நோ. கூ. ச முகாமையாளர்

1991 ஆம் ஆண்டு வவுனியா தாண்டிக்குளப்பகுதியில் சிறிலங்காப்படையினருடனான நேரடி மோதலின்போது காயமுற்று யாழ் மருத்துவ மனையில் வீரச்சாவெய்திய

ஜெகன் (சிவப்பெருமான் புஸ்பராசா - புளியங்குளம் ஓமந்தை வவுனியா)

மாதவன் (விஜயராசா குணராசா - பூவரசங்குளம் வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி-4120)

## சிந்தனைக்கு

உசிதம் என்று கருதி சுதந்திரம் சிறிது சிறிதாக அரிக்கப்படுவதில்தான், உண்மையான ஆபத்து உள்ளது.

— எட்மண்ட் பர்க்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 31-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 021-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 0?

# ஜெயலலிதாவின் கூச்சலும் மத்திய அரசின் சூழ்ச்சியும்

இந்தியப் புலனாய்வுத் துறையான 'றோ'வின் உதவியுடன் தமிழ்நாட்டில தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளைத் தேடிக்கண்டு பிடிக்கும் முயற்சியில் தமிழகப் பொலிசார் ஈடுபட்டுள்ளதாக தமிழகப் பொலிஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. இதன் ஒரு கட்டமாக, தமிழக விடுதிகள், மற்றும் தங்குமிடங்களில் இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு தற்காலிக வதிவிடங்கள் வழங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

தமிழகத்தில் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கையானது, செல்வி ஜெயலலிதா அலட்டிக் கொள்வது போன்று, விடுதலைப் புலிகளின் புதிய குழு ஒன்று தமிழகம் வந்ததினாலோ அன்றி, ராஜீவ்காந்தியின் கொலையுடன் தொடர்பு உள்ளவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களில் சிலர் இன்னமும் தமிழ் நாட்டில் தங்கியிருப்பதினாலோ அல்ல. விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற பொதுத் திட்டத்திற்கான ஓர் சூழ்நிலையை தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.

செல்வி ஜெயலலிதா எப்பொழுதுமே பதற்றமும், அச்சமும் நிறைந்த தளர்ச்சியுடையவராகவே இருந்து வந்துள்ளார் அவர் எதிர்கட்சித் தலைவியாக இருக்கும்போது அரசியலைத் துறக்கிறேன் என அறிவிப்பதும், பின்னர் சிறிதுகாலம் ஹைதராபாத்தில் ஒழித்திருப்பதும், பின்னர் அரசியலில் பிரவேசிப்பதும் அவரின் வழமையான நடவடிக்கையாகும். அவர் பயணம் செய்த கார் லொறி ஒன்றுடன் விபத்துக்குள்ளான போது தன்னை தி.மு.க கொலை செய்ய மேற்கொண்ட முயற்சி அதுவெனக் கூக்குரலிட்டார். அவர் உலகம் முழுவதும் தன்னையே அவதானிப்பது போலவும், தனக்காகவே உலகில் நடைபெறும் சம்பவங்கள் யாவும் இடம்பெறுவது போலவும் பிதற்றிக் கொள்வதும் உண்டு ஆனால் உலகில் தனது பாத்திரம் ஒரு பொருட்டல்ல என்பதை அவர் உணருவதில்லை.

இந் நிலையில், மீண்டும் புலிகள் பற்றியும் தனது உயிருக்கு அபாயம் வந்துள்ளது என்று புதுக்கதை ஒன்றை செல்வி ஜெயலலிதா ஆரம்பித்துள்ளார். இப்புதுக்கதையானது உண்மையில் சரிந்துவரும் ஜெயலலிதாவின் செல்வாக்கை மீண்டும் நிலை நிறுத்தவும் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தவும் கட்டப்பட்ட ஓர் கதை ஆகும். அத்தியாவசிய பொருள்களின் விலை ஏற்றம், போக்குவரத்துக் கட்டண உயர்வு காவிரிநீர் பிரச்சினையில் கையாலாகாத்தனம், கும்பகோணத்தில் மகாமகம் விழாவில் ஏற்பட்ட மாணவர்களின்...

# தமிழீழப் போராட்டத்தில் 'கடற்புலிகள்' — ஓர் திருப்புமுனை —

-- தராக்கி

கடல்புறா என்பது புலிகளின் ஒரு களத்திற்குரிய குறியீட்டுப் பெயர் மட்டுமல்ல. வடபகுதிக்கடலில் போரிடுவதற்கு புலிகள் தயாரித்து வரும் பெரும் திட்டத்தின் பெயருமாகும். 'தமிழ் தேசிய இராணுவம்' யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற தொடங்கியபோதே கடல்புறாவிற்கான அடிக் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகிவிட்டன.

வடமராட்சிப் பகுதியில் 1987 ஆம் ஆண்டுக்கு முன்பே சக்தி மிகுந்த தளபதியாக இருந்த சூசை என்பவரே கடல்புறாவிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். இக் கடற்புறாத்தளம் துறைமுக வசதி, படகுகள் கட்டுவதற்கான வசதி, கடற் கண்ணிகள் தயாரிப்பு மற்றும் புதியவற்றின் பரிசோதனைகள் என்பவற்றுடன் தனியான வாகனங்கள் தொலைத் தொடர்பு வசதிகள் என்பனவும்கொண்டதாகும்.

விடுதலைப் புலிகள் தமது வளத்தின் பெரும்பகுதியை கடல்புறா திட்டத்திற்கு ஒதுக்கியுள்ளனர். எமது கடற்படை தயாரான பிறகு தான் தீவுப் பகுதிகளை இராணுவத்திடமிருந்து மீட்க முடியும் என்று திரு. யோகி குறிப்பிட்டிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

வல்வெட்டித்துறையில் கூட மிகச்சில பொதுமக்கள் கடல்புறா தளத்தின் கரைப்பகுதிக்கு செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள் கடந்த வருடத்திலிருந்து இத் திட்டத்தின் பெறுபேறுகள் படிப்படியாக புலிகளின் தலைமையினால் போராட்டத்தினுள் அறிமுகமாக்கப்பட்டுள்ளது சிறிலங்கா கடற்படையினர் புலிகளின் கண்ணிவெடியில் சிக்க நேர்ந்துள்ளது தாய்க் கப்பல்கள் மீதும் ரோந்துப் படகுகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. தாக்குதல் நடத்தப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் இடங்களில்எல்லாம் கடற்புறாக்கள் கடற் கண்ணிகளைப் புதைத்துள்ளனர்.

கடல்புறா என்பது புலிகள் போராட்டத்தில்புகுத்தியுள்ள புதுப்பரிமாணம் என்பதுடன் மேலும் வளரக்கூடியது என்ப




தும் இராணுவ ரீதியாக வடக்கைக்கட்டுப்படுத்தும் அரசின் திட்டத்திற்கு மேலும் சிக்கல் கொடுக்கக்கூடியதுமாகும். கடற்பலம் என்பது புலிகளின் மூல பலம் ஆகும். பிரபாகரன் தனது கடற்படைப் பிரிவுக்கு இப் பெயரைத் தெரிவு செய்துள்ளமையானது இயல்பாகவே தமிழ் தேசிய வாதத்தை கட்டியெழுப்பும் விருப்பத்தையும் வெளிப்படுத்துவதாகவுள்ளது.

கடற்புறா என்னும் அந்த பெயரில் ஒரு நாவல் உள்ளது என்பதும், இதில் சோழசாம்ராச்சியத்தின் யுத்தக்கப்பலான கடற்புறா, அதன் தலைமைத் தளபதியான கருணாகரத் தொண்டமானின் வழி நடத்தலில் சிறிவிஜய சாம்ராச்சியத்தை தோற்கடித்ததுடன் கம்போடியா வரையுமான தென்கிழக்காசியாவின் பல நாடுகளில் வெற்றிபெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் குமுதம் இதழில் 67 - 70 வரையான மூன்றாண்டுகளில் இந்நாவல் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது. அதன் புதிய பதிப்புக்கள் இன்றும் வெளிவரும் அளவுக்கு அது பிரபல்யமானது. அதில் நாவலாசிரியர் சாண்டிலியன் தனது முன்னுரையில் கூறுவது புலிகளின் சிந்தனையில் பதிந்திருக்கக் கூடும், இந்தத் தகவல்களிலிருந்தும்குலோத்துங்க சோழன் பற்றிய குறிப்புகளிலிருந்தும், தமிழர்கள் கடற்பரப்பில் வர்த்தக நோக்கில் மட்டுமன்றி போர்களை நடத்துவதற்காகவும் பயணம் செய்துள்ளனர் எனத் தெரிந்து கொண்டேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்

மேலும், குலோத்துங்க சோழன்தான் சிறி விஜய முடிபற்றி வந்த தகராறைத் தீர்த்து சமாதானத்தை நிலை நாட்டிய முதல் மன்னன் ஆவார். கி.பி. 1063 - 1070க்கும் இடைப்பட்ட காலத்தில் சீனாவரை தமிழர்கள் தூதுக் குழு சென்றிருந்தது. இத்தூதுக்குழுவிற்கு தேவிகுல என்பவர்தலைமை தாங்கியுள்ளார். அத்துடன் குலோத்துங்கனின் திறமை என்னுடைய இந்த அனுபவங்களையெல்லாம் எனது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள முற்பட்டதன் விளைவே 'கடல் புறா' என்னும் இந்நாவல் என அவர் தனது முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

கலிங்கத்தை வென்ற சோழராச்சியத் தளபதியான தொண்டமான் பற்றிய குறிப்புகளிலிருந்தும் இந்நாவல் எழுதும் ஆர்வம் உந்தப்பட்டதாக இந்நாவலாசிரியர் மேலும் கூறியுள்ளார்.

56க்கு பிந்திய தமிழர் பரம்பரையில் சாண்டிலியனின் கடல்



தளபதி சூசை

புறாவை வாசிக்காமலோ அல்லது அறியாமலோ இருப்பவர் மிக அரிதே எனக் கூறலாம்

திரு. பிரபாகரனின் இராணுவக் கண்ணோட்டத்தில் மக்களை நம்பிக்கை கொள்ளச் செய்யும் இத்தகைய சரித்திரப் பிரசித்தி மிக்க சொற்கள் எவ்வளவுக்கு பயன்படும் என்பது புரிந்திருக்க வேண்டும்.

சூசையின் தலைமையில்விடுதலைப் புலிகள் அமைத்துள்ள கடல்புறா ஈழப் போராட்டத்தில் முனைப்பான இராணுவத் தாக்கதை ஏற்படுத்தும் 1989 இல் கடல்புறா திட்டம் தொடங்கப்படும் வரையில் கடல் என்பது போக்குவரத்து தேவைகளுக்கும் அன்றாட பாவனைக்கும் மட்டுமே பயன்படுத்தப்பட்டது எனலாம். இப்போதும் கூட புலிகளின் கடற்பிரிவின் மூலமே ஆயுதங்கள், தோட்டாக்கள், வெடிமருந்துகள் என்பன ஈழப்பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றது.

எப்படியிருப்பினும் கடல்புறா என்பது கடல்பலத்தை கடல் போராக மாற்றுவதற்கு விடுதலைப் புலிகள் எடுக்கும் முயற்சியை எடுத்துக் காட்டுவதாகும். ஆனால் இதில் விடுதலைப் புலிகள் எந்தளவுக்கு வெற்றி பெற்றுள்ளனர்? ஆனால் அத்திட்டத்தில் விடுதலைப்புலிகள்செலுத்தும்மூல வளங்களைப் பார்க்கும் எவரும் இது தனித்ததொரு செயற்பாடு என ஒதுக்கிவிட முடியாது.

கப்பல் மூலமான விநியோகம் வளர்ச்சி காண்பதுடன் நவீனமயப்படுத்தப்படும் வகையில் விடுதலைப்புலிகள் கடல் நடவடிக்கைகளில் வெற்றிபெற்றால் அவர்கள் தரையிலும் சக்தி மிக்கவர்களாக மாறுவார்கள்என்பதில்சந்தேகமில்லை. விநியோக வழியில் தொடர்பு துண்டிக்கப்படாத வரை விடுதலைப் புலிகள் யுத்தத்தை தொடர்வதை எந்த நிர்ப்பந்தமும் தடுத்து விடாது என்பது இலகுவான தொருகணிப்பீடு தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும், நடுக்கடலில் டொங்கோவா கப்பல் கைப்பற்றப்பட்டதும் விடுதலைப் புலிகளுக்கான விநியோக வழியில் தடங்கலை ஏற்படுத்தியிருப்பினும் எப்போதும் பொருத்தமுடையதாகஇருக்குமென எதிர்பார்க்கமுடியாது.

நன்றி - ஐலண்ட்

### மேற்காசிய பேச்சு வார்த்தைகள்

# ஏப்ரல் 27இல் நடைபெறும்; அமெரிக்கா அறிவிப்பு

(வாஷிங்டன்)

அரபு - இஸ்ரேல் அமைதிக்கான அடுத்தசுற்றுப் பேச்சு வார்த்தைகள் அடுத்தமாதம் 27 ஆம் திகதி நடைபெறலாம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது

அமைதித் திட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துத்...

இவரின் பதவி விலகலை அடுத்து மேற்காசிய அமைதிப் பேச்சுவார்த்தைகளில் பெருமளவு பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அயல் அரபு நாடுகளுடன் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கான அமெரிக்க ஆதர...

# ராணுவத்தை கலைப்பதில்லை; தென் ஆபிரிக்ககாங்கிரஸ் உறுதி

(ஜொ ஹன்னர்ஸ்பேர்க்)

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் இராணுவ அமைப்பை கலைக்க வேண்டுமென தென் ஆபிரிக்க அரசாங்கம் கருத்து வெளியிட்டுள்ளது.

இனவாதப் போக்கினை ஒழித்து மறுசீரமைப்புப்பணிகளை தடங்கலின்றி மேற்...

இடைக்கால பாராளுமன்றம் ஒன்றை அமைத்தல் தேர்தல்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தல் அரசமைப்புச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருதல் போன்ற நடவடிக்கைகளை கவனிப்பதற்கு ஏழு பேர் கொண்ட குழுவொன்றை அரசாங்கம் நியமிக்க முடிவு செய்துள்ளது.

### அமெரிக்க காங்கிரசை

ணம் செய்த கார் லொறி ஒன்றுடன் விபத்துக்குள்ளான போது தன்னை திமுக கொலை செய்ய மேற்கொண்ட முயற்சி என்வெனக் கூக்குரலிட்டார். அவர் உலகம் முழுவதும் தன்னையே அவதானிப்பது போலவும், தனக்காகவே உலகில் நடைபெறும் சம்பவங்கள் யாவும் இடம்பெறுவது போலவும் பிதற்றிக் கொள்வதும் உண்டு ஆனால் உலகில் தனது பாதிரம் ஒரு பொருட்டல்ல என்பதை அவர் உணருவதில்லை.

இந் நிலையில், மீண்டும் புலிகள் பற்றியும் தனது உயிருக்கு அபாயம் வந்துள்ளது என்று புதுக்கதை ஒன்றை செல்வி ஜெயலலிதா ஆரம்பித்துள்ளார். இப்புதுக்கதையானது உண்மையில் சரிந்துவரும் ஜெயலலிதாவின் செல்வாக்கை மீண்டும் நிலை நிறுத்தவும் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தவும் கட்டப்பட்ட ஓர் கதை ஆகும். அத்தியாவசிய பொருள்களின் விலை ஏற்றம், போக்குவரத்துக் கட்டண உயர்வு காவிரிநீர் பிரச்சினையில் கையாலாகாத்தனம், கும்பகோணத்தில் மகாமகம் விழாவில் ஏற்பட்ட மரணங்களினால் எழுந்த கண்டனம் இவை யாவற்றிற்கும் மேலாக தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பலமான ஒரு சக்தி உள்ளதென்பதும், அது வெளிவரத் தொடங்கியமையால் எழுந்துள்ள அச்சம் என்பனவற்றால் ஆட்டம் காண தொடங்கியுள்ள செல்வி ஜெயலலிதா தற்பொழுது மீண்டும் தனது உயிருக்கு அச்சுறுத்தல் என்ற புரளியைக் கிளப்பிவிட்டுள்ளார்.

செல்வி ஜெயலலிதா தனது செல்வாக்கை கட்டிக்காக்க உயிராபத்து என அவர் போடும் கூச்சலை மத்திய அரசாங்கமோ தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப்பார்க்கின்றது ஜெயலலிதாவின் கூச்சலுக்கு ஏற்ப மேலதிக பாதுகாப்பை அவருக்கு வழங்கியதோடு பாதுகாப்பிற்கென நிதி ஒதுக்கீட்டையும் வழங்கியுள்ளது. அத்தோடு புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற செல்வி ஜெயலலிதாவின் கோரிக்கையைத் தீவிரமாகப் பரிசீலனை செய்யப்படுவதாகவும் ஒருவாரத்திற்குள் முடிவெடுக்கப்படும் எனவும் மத்திய அரசு அறிவித்துள்ளது

விடுதலைப் புலிகளின் போராட்டம் தென்னாசியாவிற்கு ஓர் முன்மாதிரி என்பது இன்று பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது அத்தோடு இப்போராட்டம் இந்தியாவிலுள்ள தேசிய இனங்களின் எழுச்சிக்கும் வழிவகுத்துள்ளது. இந்நிலையில், தமிழீழப் போராட்டம் தமக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக இந்திய அதிகார வர்க்கம் கருதுகின்றது.

இந்நிலையில் விடுதலைப்புலிகளைத் தடைசெய்து அதனை ஓர் பயங்கரவாத இயக்கம் எனக்காட்ட இந்திய அரசு முயற்சிக்கின்றது ஆனால் இது தமிழக மக்களுடன் தொடர்பு கொண்ட விவகாரமாகையால் நேரடியாக தலையிட்டு மத்திய அரசால் வலிந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ற நிலை உருவாவதை மத்திய அரசாங்கம் விரும்பவில்லை. இதன் காரணத்தினால், மாநில அரசின் கோரிக்கையின் அடிப்படையிலேயே இந்நடவடிக்கைகளை மேற்கொண்டதான ஒரு நிலையை உருவாக்கவே மத்திய அரசு முனைகிறது. அதில் தற்பொழுது வெற்றியும் பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில், செல்வி ஜெயலலிதா, மத்திய அரசாங்கத்தின் நீண்டகாலத்திட்டம் ஒன்றிற்கு ஆதரவாகச் செயற்பட்டுள்ளார். ஆனால், இதன்பலாபலன் ஜெயலலிதாவிற்குத் தெரிய சில காலமாகலாம். புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என மத்திய அரசு ஆரம்பிக்கும் நடவடிக்கை இறுதியில் திராவிட இயக்கங்களுக்கு எதிரானதாகவே மாறும் என்பதில் சந்தேகமில்லை, அப்பொழுது திராவிட இயக்கங்கள் யாவும் நெருக்குதல்களுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாது. அப்பொழுது செல்வி ஜெயலலிதா தலைமை தாங்கும் அ.தி.மு. காவும் நசுக்கப்படும் என்பதில் ஐயம் எதுவுமில்லை. அதாவது பஞ்சாப்பில் அகாலிதளம் புறந்தள்ளப்பட்டு காங்கிரஸ் ஆட்சி பிடித்திருப்பது திராவிடக் கழகங்களும், செல்வி ஜெயலலிதாவும் கற்றுக்கொள்ள வேண்டிய ஓர் புதியபாடம்.

மேற்காசிய பேச்சு வார்த்தைகள்

## ஏப்ரல் 27இல் நடைபெறும்; அமெரிக்கா அறிவிப்பு

(வாஷிங்டன்)

அரபு - இஸ்ரேல் அமைதிக்கான அடுத்தசுற்றுப் பேச்சுவார்த்தைகள் அடுத்தமாதம் 27 ஆம் திகதி நடைபெறலாம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது

அமைதித் திட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினர்க்கும் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடக்குவது பற்றி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேகர் கடிதங்கள் எழுதியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் இஸ்ரேலின் வெளியுறவுத்துறை அமைச்சர் டேவிட் லெவி தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இவரின் பதவி விலகலை அடுத்து மேற்காசிய அமைதிப் பேச்சுவார்த்தைகளில் பெருமளவு பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அயல் அரபு நாடுகளுடன் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கான அமெரிக்க ஆதரவிலான திட்டத்தில் சேர்ந்து கொள்வதற்கு டேவிட் லெவி தான் அரசுதரப்பில் ஆதரித்துப் பேசி வந்தார்.

இஸ்ரேலிய பிரதமர் சாமிரின் கடுமையான போக்கினால்தான் தான்பதவிவிலகியதாகவும், அத்துடன் இஸ்ரேலின் நலனுக்காகவே பதவி விலகியதாகவும் அவர் தெரிவித்தார்.

யூனியன்கார்பைட் முன்னாள் தலைவரை

## விசாரணைக்கு ஆஜராகுமாறு இந்திய நீதிமன்றம் உத்தரவு

(போபால்)

உலகில் மனித அழிவை பெருமளவு ஏற்படுத்திய போபால் விஷவாயு சம்பவத்துடன் தொடர்புடைய 'யூனியன் கார்பைட்' நிறுவனத்தின் முன்னாள் தலைவர் வொரன் அன்டர்சனை விசாரணைக்காக அமெரிக்காவிலிருந்து நாடு கடத்துவதற்கான உத்தரவை இந்திய நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

இந்திய நீதிமன்றத்தில் அன்டர்சனுக்கு எதிரான குற்றவியல் தொடர்புடைய குற்றச்சாட்டுகள் இருப்பதால் அவரை விசாரணைக்கு ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நீதிமன்றத்தின் இந்த உத்தரவு வாஷிங்டனுக்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வாறானால் அவர் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டு இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது

1984 இல் இடம் பெற்ற இந்த விபத்தில் 3800 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜம்மு காஷ்மீர்

## எல்லை தாண்டும் பேரணி தடுப்பதில் இந். பாக். உறுதி

(சிறிநகர்)

காஷ்மீர் எல்லையைத் தாண்டி ஊர்வலம் செய்யவிருக்கும் ஜே கே எல். எவ். தீவிரவாதிகளை தேவையேற்பட்டால் துப்பாக்கி முனையிலாவது தடுத்து நிறுத்த பாகிஸ்தான் இந்தியா ஆகிய இரு நாடுகளும் உறுதிபூண்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஊர்வலம் எல்லைப் பகுதியை அடைவதை தடுத்து நிறுத்த ஆயிரக்கணக்கான பொலிசாரும் இராணுவ தொண்டர்படையினரும் அனுப்பட்டுள்ளனர் என்று பாகிஸ்தான் சுதந்திர காஷ்மீர் பிரதம மந்திரி அறிவித்துள்ளார்.

இதே போலவே எல்லையைத் தாண்டுபவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்படும் என்று இந்தியாவின் ஜம்முகாஷ்மீர் மாநில ஆளுநரும் எச்சரிக்கை செய்துளளார்

ஆனால் தடையை மீறி ஊர்வலத்தை நடத்தியே தீப் போவதாக ஜே.கே. எல். எவ். வினர் உறுதியளித்துள்ளனர்.

# ராணுவத்தை கலைப்பதில்லை; தென் ஆபிரிக்ககாங்கிரஸ்உறுதி

(ஜொ ஹன்னர்ஸ்பேர்க்)

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் இராணுவ அமைப்பை கலைக்க வேண்டுமென தென் ஆபிரிக்க அரசாங்கம் கருத்து வெளியிட்டுள்ளது.

இனவாதப் போக்கினை ஒழித்து மறுசீரமைப்புப்பணிகளை தடங்கலின்றி மேற்கொள்ள ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கலைக்கப்படுவது அவசியமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஆனால் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அதன் இராணுவத்தைக் கலைக்க விரும்பவிலலை என அறிவித்துள்ளது கெரில்லாயுதத்தை நிறுத்தியுள்ள போதிலும் ஜனநாயக அரசாங்கம் ஒன்று அமையும் வரை இராணுவத்தைக் கலைப்பதில்லையென ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உறுதியாக தெரிவித்துள்ளது

இதே நேரம் அரசாங்கத் திட்டம் நியாயமானதேஎன்று அரசாங்க அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர் ஆபிரிக்கதேசிய காங்கிரசின் கோரிக்கைகளுக்கு இணங்க மாட்டோம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இடைக்கால பாராளுமன்றம் ஒன்றை அமைத்தல் தேர்தல்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தல் அரசமைப்புச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருதல் போன்ற நடவடிக்கைகளை கவனிப்பதற்கு ஏழு பேர் கொண்ட குழுவொன்றை அரசாங்கம் நியமிக்க முடிவு செய்துள்ளது.

## அமெரிக்க காங்கிரசை மறுசீரமைக்க புஷ் திட்டம்

(வாஷிங்டன்)

அமெரிக்க காங்கிரசை மறுசீரமைக்கும் திட்டமொன்றைத் தாம் முன்வைக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார.

கெனக்டிகட் என்னுமிடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர் அமெரிக்க காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறிச் செயல்படுவதாக குற்றஞ் சாட்டினார்.

## சென்னைதுறைமுகத்தில் கப்பல் தீப்பற்றியது

(சென்னை)

சென்னை துறைமுகத்தில் நின்ற சரக்குக் கப்பல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை திடீரென தீப்பற்றி எரிந்ததால் துறைமுகத்தில் நின்ற ஏனைய கப்பல்கள் பாதுகாப்புக் கருதி அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டன.

இந்திய கப்பல் காபரேஷனுக்கு சொந்தமான ''விஷ்வமாதுரி'' என்ற சரக்குக் கப்பலே இவ்வாறு தீப்பற்றிக் கொண்டது இக் கப்பலின் அறை ஒன்றில் மூண்ட தீ, பின்னர் கப்பலின் ஏனைய பகுதிகளுக்குப் பரவியதாக தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் பற்றிய தீ பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் தீ மூண்டதற்கான காரணம் தெரியவில்லை எனவும் கப்பல் காப்பரேஷன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் இத் தீயினால் உயிரிழப்பு எதுவும் நிகழவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

## பாக்குநீரிணைப் பகுதியில் கடற்கண்காணிப்பு தீவிரம்

(சென்னை)

இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியை வானில் இருந்தும் கடலிலிருந்தும் கண்காணிப்பது தீவிரப் படுத்தப்பட்டுள்ளது என்று தமிழக காவல் துறை கண்காணிப்பாளர் ஜாபர் செயிட் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையொன்றுதமிழகத்தில் ஊடுருவியிருப்பதாக அண்மையில் சட்டப் பேரவையில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடற்கரைப் பகுதியில் கண்காணிப்பு தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## வீதி விபத்தில் 39 பேர் பலி

அருணாசலப் பிரதேசத்தில் இடம் பெற்ற வீதிவிபத்தொன்றில் குறைந்தது 39பேர் உயிர் இழந்துள்ளனர் என்றும் 24பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு கமான் மாவட்டத்தில் நேற்று முன்தினம் அறுபது பயணிகளுடன் சென்ற பேரூந்து ஒன்று ஆழமானபள்ளம் ஒன்றில் விழுந்ததிலேயே இந்த விபத்து நேரிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சோமாலியாவில்

## நான்கு மாதங்களில் 14,000 பேர் பலியாகினர்

(நியூயோர்க்)

சோமாலியாவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் 14, 000 சோமாலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 27 000 பேர் காயமடைந்துள்ளனர். இவ்வாறு இரண்டு மனித உரிமைகள் குழுக்கள் அறிவித்துள்ளது.

ஐ. நா. எதிர்பார்த்த இலக்கைவிட 10,000 பேர் இறந்திருப்பதாகவும்.

சோமாலி தலைநகரான மொகதீஸீவில் கடந்த நவம்பர் மாதம் முதல் கோஷ்டிச் சண்டைகள் இடம் பெற்று வந்தன என்றும் ஆயுதம் தாங்கிய கொள்ளையர்களே சண்டைக்குக்காரணமாகஉள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாதம்

# மத்திய வங்கியில் மோசடி; கணக்காளர் நாயகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கணக்காளர் நாயகம் காமினி ஏப்பாவினால் 'சரியான கணக்காய்வு அறிக்கை' என்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஐந்தொகை அறிக்கை ஒன்றினை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது. இந்த ஐந்தொகை அறிக்கையை அத்தாட்சிப் படுத்தக் காமினி ஏப்பா ஏற்கனவே மறுத்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1990 ஆம் ஆண்டிற்கான காமினி ஏப்பாவின் அறிக்கையில் தனது பெயர் மத்திய வங்கியின் ஐந்தொகை அறிக்கையில் தவறாக உபயோகிக்கப்பட்டுள்ளதாக கணக்காளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார். 1990ஆம் ஆண்டு ஏப்ரல் மாத அறிக்கையைத் தான் அனுமதிக்க மறுத்ததாகவும் காமினி ஏப்பாவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனது பெயரும், பதவியும் தவறாகப் பாவிக்கப்பட்டது தொடர்பாகத்தான் ஆகஸ்ட் 1990 இல் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நெவில் கருணதிலக்காவின் கவனத்திற்குத் தான் கொண்டுவந்ததாக காமினி ஏப்பா தனது அறிக்கையில் தெரிவிக்கிறார்.

மத்திய வங்கி தொடர்பாக காமினி ஏப்பாவின் அறிக்கை வெளியிடும் சில தகவல்கள் வருமாறு.

★ மத்திய வங்கியின் 40-வது வருடாந்தக் கொண்டாட்டச் செலவு 38,633,201 ரூபா

★ கழுத்துப் பட்டிகள் 2,025 கொள்வனவு செய்ய ஏற்பட்ட செலவு 1,031,272 ரூபா

★ மத்திய வங்கி ஆளுநரின் உபசரிப்புச் செலவுகள் 3,10,9,994 ரூபா

மேற்படி செலவுகள் தொடர்பான கோவைகளை மத்திய வங்கியின் செயலாளர் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க மறுத்ததாக காமினி ஏப்பா குற்றம் சாட்டியுள்ளார்.

இதுபோல் வேறு பல விடயங்களிலும் தகவல்களை வழங்க மத்திய வங்கி மறுத்து விட்டதாக காமினி ஏப்பா தெரிவிக்கிறார். தங்கத்தைக் கொள்வனவு செய்ய மத்திய வங்கி மேலதிகமாக 114 058.36 அமெரிக்க டாலர்களைச் செலவு செய்துள்ளது. இது பற்றிய தகவலையும் மத்திய வங்கி மறைத்து விட்டதுஎன்று காமினி ஏப்பா தனது அறிக்கையில் தெரிவிக்கிறார்.

## ஒருவர் கைது

(சென்னை)

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் வீட்டுக்கருகே சந்தேகத்திற்கிடமான முறையில் வயர்லஸ் கருவியுடன் நடமாடிய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவர் சந்தேகித்தது போல் விடுதலைப்புலி அல்ல என்றும் சர்வதேச ஏஜென்சி ஒன்றில் தொழில்புரிபவர் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## பொலிஸ் நிலையத்திலிருந்து

# மறைந்த துப்பாக்கிகள் கொள்ளையரிடம் மீட்பு

(கொழும்பு)

கல்கிசை பொலிசிலிருந்து காணாமல் போன கைத்துப்பாக்கிகள் பல்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளின் பலனாக கல்கிசை பொலிசைச் சேர்ந்த சார்ஜன்ட் மேஜர் ஒருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப பொலிஸ் உத்தியோகத்தர் கடந்த சில மாதங்களாக கடமைக்கு வராமல் தலைமறைவாகி இருந்தார் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

முகத்துவாரம் மத்துகம போன்ற இடங்களில் மேற்படி கைத்துப்பாக்கிகள் கொள்ளையர், கொலைஞர் போன்ற பயங்கர குற்றவாளிகளிடமிருந்து மீட்கப்பட்டதை அடுத்தே அவை கல்கிசை பொலிசிலிருந்து காணாமல் போனவை என்றும் சமீபகாலமாக கடமைக்கு வராமல் தலைமறைவாகிவிட்ட சார்ஜன்ட் மேஜரே இதற்குப் பொறுப்பு என்றும் தெரியவந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர். மொத்தம் எட்டு கைத்துப்பாக்கிகள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

# கடும் வரட்சியினால் 3 நாட்கள் மட்டுமே வேலை

வரட்சி காரணமாக ஊவா மாகாண தோட்டங்களில் ...

நாட்களுக்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்றும் ...

# யாழ். இந்துக் கல்லூரியில் நேற்று தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியின் தமிழ்ச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழ் விழா நேற்று திங்கள் 8.45 தொடக்கம் 1.30 வரையாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி. வேலாயுதம் அவர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார் இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் இளங்குமரனும் உரை நிகழ்த்தினார்

மேலும் இந் நிகழ்ச்சியின் சிறப்பம்சங்களாக கலையரங்கம் (செந்தமிழ் மக்களே வாரீர்) பேச்சு, பல்லியம், பரிசளிப்பு வில்லுப்பாட்டு, இசைக் கச்சேரி, நாடகம் (ஒரு பிடிமண்) ஆகிய நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்று நிறைவேறியது. (பா)

## தேசத்துரோகி

அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்கவேண்டுமென முனைப்புடன் செயற்பட்ட இரகசியப் பொலிஸ் அதிகாரி திரு தி. தாமோதரம் பிள்ளை (உரும்பிராய்) இவருக்குத் துணையாகச் செயற்பட்ட முன்னாள் யாழ். உதவி மேயர் திரு. செ. பேரின்பநாயகம் (குருநகர்), திரு சி. செல்லையா (மயிலிட்டி) ஆகியோர் கைதுசெய்யப்பட்டமை தொடர்பாக 11. 01. 1992 அன்று தெரியப்படுத்தியிருந்தோம். தற்போது இவர்களது விசாரணைகளும் பூர்த்தியாகியுள்ளன.

துரையப்பா நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட எம்மவர் ...

... என்பதன் அடையாளமாகவே இடம் பெற்றது. தான் உதவி மேயராக பணிபுரிந்த சிறிலங்கா அரசிற்கு எதிரான நடவடிக்கையை அனுமதிக்கக் கூடாது என்ற நோக்கத்திற்காகப் பேரின்பநாயகம் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதில் முனைப்புடன் செயற்பட்டார்.

பேரின்பநாயகம் இது சம்பந்தமாகப் பலரை அணுகித் துரையப்பா அழிப்பு நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றித் தகவல்கள் திரட்டுவதில் ஈடுபட்டார். அதேபோல் ஒரு முறை காங்கேசன்துறையைச் சேர்ந்த க. தனபாலசிங்கம் என்பவரிடம் மேற்படிவிடயம் பற்றிக் கதைத்தபோது தனபாலசிங்கம் தகவல் அறிந்தவரைத் தனக்குத் தெரியும் ...

## ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்ட

# முக்கிய மனிதர்களை மூடிமறைக்க முயற்சி

(சென்னை)

ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் சில முக்கியமான மனிதர்கள் சம்பந்தப்பட்டிருந்த விஷயத்தை மூடி மறைப்பதற்கு உயர் பதவிகளில் இருக்கும் சிலர் முயற்சி செய்து வருகிறார்கள் என்று தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

மாநில சட்டசபையில் எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினை ஒன்றிற்குப் பதிலளித்துப் பேசுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மத்திய உள்துறை அமைச்சரிடமும், மத்திய புலனாய்வுத் துறையிடமும் தாம் இது பற்றிக் குறிப்பிட்டதாகவும் செல்வி ஜெயலலிதா கூறினார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சில அரசியல் கட்சித் தலைவர்கள் முன்னர் பொது மேடைகளில் ஆற்றிய பேச்சுக்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சரிடம் தாம் கேட்டிருப்பதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

ஆனால் தான் முதலமைச்சராக இல்லாத காலத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்குத் தான் சாட்சியமளிக்க முடியாது என்றும் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

# தடா கைதிகளை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைப்பு

தற்போது சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தடா சட்டக் கைதிகள் 130 பேர் மீதான வழக்குகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம் அமைக்கப்படும் என்று மாநில சட்டத்துறை அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி தெரிவித்திருக்கிறார்.

நீதிநிர்வாகம் சிறைத்துறை மானியக் கோரிக்கை மீது சட்டப்பேரவையில் நடந்த விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## பாதுகாப்புதீவிரம்

[சென்னை]

தமிழ் நாட்டிலுள்ள சிறைச்சாலைகளின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த இரண்டு கோடியே 20 லட்சம் ரூபா செலவு செய்யப்படவுள்ளது. அத்துடன் எல்லாச் சிறைச்சாலைகளிலும் எலக்ரோனிக் அபாய அறிவிப்பு பொருத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## சுங்கத்திணைக்களத்திடம்

# புலிகளின் கப்பலை ஒப்படைக்க உத்தரவு

விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பலை சுங்கத்திணைக்களத்திடம் ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 6ஆம் திகதி இந்தியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட ''டொன் கோவா'' என்ற கப்பலை சுங்கத்திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு சென்னை விசேட நீதிமன்ற மேலதிக நீதியரசர் உத்தரவிட்டுள்ளார்.

# நட்வர்சிங்கின் கொழும்பு விஜயம்; அரசியல் வட்டாரத்தில் சர்ச்சை

(கொழும்பு)

இந்திய முன்னாள் வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் சிறிலங்காவிற்கு விஜயம் மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்கியது யாரென்ற சர்ச்சை எழுந்துள்ளது.

ஏனெனில் அவருக்கு விசா வழங்கப்பட்ட சமயத்தில் புதுடில்லியிலுள்ள சிறிலங்காத் தூதுவர் நெவில் கனகரத்தினா கொழும்பில் தங்கியிருந்துள்ளார்.

அது மட்டுமன்றி முன்னாள் அமைச்சர் நட்வர்சிங்கின் கொழும்பு விஜயம் பற்றியோ, அவர் பங்குபற்றும் நிகழ்ச்சிகள் பற்றியோ சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் தெரியவருகின்றது.

அத்துடன் நட்வர்சிங் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வி. ஐ. பிக்களுக்குரிய பாதையைப் பயன்படுத்தியதாகவும் சொல்லப்படுகின்றது

இதேவேளை ஹொட்டல் ஒபறோயில் நடைபெற்ற காமினி திசாநாயக்காவின் பிறந்ததினக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள வெளியுறவு அமைச்சகத்தைச் சேர்ந்த பல உயரதிகாரிகள் தயாராகவிருந்தனர் எனவும், கடைசிநேர அறிவிப்பின் பிரகாரம் அவர்கள் விருந்தைக்கைவிட நேர்ந்ததாகவும் தெரியவருகின்றது

இந் நடவடிக்கைகளில் ஈடு ...

# மாணவர்கள் கைதாவது தொடர்ந்து அதிகரிப்பு

பாடசாலை மாணவர்கள் பலர் இராணுவ உளவாளிகளினால் தொடர்ந்து கைது செய்யப்படுகின்றனர். இவர்கள் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று உறவினரால் கூட அறியமுடிவதில்லையாம்.

சில தினங்களுக்கு முன்னர் ஓமந்தை கொத்தணி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ...

## தனியார்

படாது கூட்டுறவுச் சங்கங்களுக்கே விநியோகிக்கப்பட்டுவந்தது தெரிந்ததே தற்போது ...

# கடும் வரட்சியினால் 3 நாட்கள் மட்டுமே வேலை

வரட்சி காரணமாக ஊவா மாகாண தோட்டங்களில் வாரத்திற்கு மூன்று நாட்கள் மட்டுமே வேலை வழங்கப்படுகிறது. இதனால் தோட்டத் தொழிலாளர்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர் என்று பதுளை மாவட்ட எம். பி. ரி. வி சென்னன் தோட்டத் தொழில் அமைச்சரை கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

வாரத்திற்கு மூன்று நாட்கள் மட்டுமே வேலை வழங்கப்படுவதால் தொழிலாளர் அந்த சம்பளப் பணத்தைக் கொண்டு தமது உணவுத்தேவையைக் கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் உள்ளனர் என்றும்,


ஆதலால் தோட்ட தொழிலாளர்களுக்கு 25 நாள்வேலை வழங்க வேண்டும் அல்லது 25 நாட்களுக்குரிய சம்பளம்வழங்கப்பட வேண்டும் என்றும் சென்னன் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்

## இன்றைய தமிழ்க் கவிதை

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் கலை வட்டம் நாளைபுதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு ''இன்றைய தமிழ்க் கவிதை'' என்னும் தலைப்பில் சொல்லாடல் ஒன்றை நடத்தவிருக்கிறது

யாழ். பல்கலைக்கழக அரும்பொருட்கூடத்தில் நடைபெறவிருக்கும் இச்சொல்லாடலில் கவிஞர் சோ. பத்மநாதன் கவிஞர் சு வில்வரத்தினம், கலாநிதி, சு. கனகராஜா ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 3 - 12 - 1930

மறைவு 24 - 3 - 1990

**அமரர் திரு. த. பூபாலசிங்கம்**
**அவர்கள்**

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், நண்பர்கள்,
உற்றார், உறவினர்கள்.

அச்செழு நீர்வேலி
(அச்செழு தபாற்கந்தோர் அருகில்) (2349)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அன்று தெரியப்படுத்தியிருந்தோம். தற்போது இவர்களது விசாரணைகளும் பூர்த்தியாகியுள்ளன.

துரையப்பா நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட எம்மவர்களைக் கைது செய்து தண்டனை வழங்குவதன் மூலம், எமது விடுதலைப் போராட்டத்தைப் பூண்டோடு அழித்து விடவேண்டும் என மும்முரமாகச் செயல்பட்டவர்கள் பஸ்தியாம்பிள்ளை (சி.ஐ.டி.) தாமோதரம்பிள்ளை(ஓ ஐ.சி) ஆகியோராவர். இவர்கள் இருவரும் குறிப்பாகத் தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு எதிராகப் பல துரோகச் செயல்களில் ஈடுபட்டவர்கள். இதில் பஸ்தியாம்பிள்ளை 1978-ம் ஆண்டு, எமது முகாமைத் தேடிவந்த சமயம் முருங்கன் பகுதியில்வைத்து நடைபெற்ற மோதலில் கொலையுண்டார்.

தேசத்துரோகி துரையப்பா அழிக்கப்பட்டபின் நாகராஜா மாஸ்ரர் எம்மவர் ஒருவரைக் கூட்டிவந்து செல்லைய வீட்டில் தங்கவைத்துள்ளார். செல்லையா அவருடன் கதைத்தபோது அவர் பெயர் கிருபாகரன் என்பதையும், துரையப்பா அழிப்பு நடவடிக்கையில் சம்பந்தப்பட்டுள்ளார் என்பதையும் தெரிந்துகொண்டார். கிருபாகரன் அங்கிருந்து சென்ற சில நாட்களின் பின் இச்சம்பவங்களைத் தனது நம்பிக்கைக்குரியவர் என்ற முறையில் க தனபாலசிங்கம் (காங்கேசன்துறை) என்பவருக்குச் செல்லையா கூறியுள்ளார்.

அப்பிறட் துரையப்பாவின் அழிப்பு நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதில் தாமோதரம்பிள்ளை தீவிரமாகச் செயற்பட்டார். இவர் தனது நடவடிக்கைக்கு உதவியாகத் தகவல்களைப் பெற்றுத் தமக்கு வழங்குவதற்கு யாழ். உதவி மேயராக இருந்த இவரது நண்பராகிய சொ. பேரின்பநாயகம் என்பவரைநியமித்தார்.

துரையப்பாவின் அழிப்பு நடவடிக்கையானது, பேரின்பநாயகம் அங்கம் வகித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தமிழின விரோத நடவடிக்கைகள் எமது மண்ணிலே அனுமதிக்கப்படமாட்டாது

தில் ஈடுபட்டார். இதேபோல ஒரு முறை காங்கேசன்துறையைச் சேர்ந்த க தனபாலசிங்கம் என்பவரிடம் மேற்படிவிடயம் பற்றிக் கதைத்தபோது தனபாலசிங்கம் தகவல் அறிந்தவரைத் தனக்குத் தெரியும் எனக் கூறிச் செல்லையாவை இவருக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். பேரின்பநாயகம் செல்லையாவிடம் பெற்ற தகவல்களைத் தாமோதரம்பிள்ளைக்குக் கூறியதுடன் செல்லையாவுடன் தொடர்பையும் ஏற்படுத்தி வைத்தார். செல்லையாவால் கொடுக்கப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டுதாமோதரம்பிள்ளை கிருபாகரனை அடையாளம் கண்டு கொள்வதுடன் கிருபாகரன் பற்றிய முழு விபரங்களையும் அறிந்து கொள்கிறார் பின்னர் தனது பிறபுலனாய்வு நடவடிக்கையின் மூலம் கிருபாகரன் பொலநறுவைக்கு அருகேயுள்ள மன்னம்பிட்டி என்ற இடத்தில் தலைமறைவாக உள்ளார் என்பதனை அறிந்து அங்கு சென்று கிருபாகரனைக் கைது செய்து யாழ்ப்பாணம் கொண்டுவந்துள்ளார் அதன் பின்னர் யாழ். கோட்டை பொலிஸ் நிலையத்திற்குச் செல்லையா சென்று கைது செய்யப்பட்டவர் கிருபாகரன் தான் என்பதனை நேரடியாகஅடையாளம் காட்டியுள்ளார்.

இங்குதாமோதரம்பிள்ளை, பேரின்பநாயகம், தனபாலசிங்கம், செல்லையா ஆகியோர் திட்டமிட்ட முறையிலேயே செயற்பட்டுள்ளார்கள். இவ்விடயங்களைநன்குவிசாரித்து, ஆழமாகஆராய்ந்ததில் இதில் சம்பந்தப்பட்ட செல்லையா காட்டிக்கொடுக்க வேண்டும் என்ற திட்டமிடாமலேயே ஆரம்பத்தில் இவ்விடயத்தைத் தனபாலசிங்கத்திற்குக் கூறியுள்ளார். அதன் பின்னர் பேரின்பநாயகம், தாமோதரம்பிள்ளை, தனபாலசிங்கம் ஆகியோரால் பின்னப்பட்ட சூழ்ச்சிவலைக்குள் திட்டமிட்டு வீழ்த்தப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இந்த நடவடிக்கைகளில் பங்களித்தபோதும் அடிப்படையில் காட்டிக்கொடுக்கும் எண்ணமில்லாதிருந்த செல்லையாவை மன்னித்து விடுதலை செய்கின்றோம்.

அமைச்சர் நடவாசிங்கவின் கொழும்பு விஜயம் பற்றியோ, அவர் பங்குபற்றும் நிகழ்ச்சிகள் பற்றியோ சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு

இந் நடவடிக்கைகளில் ஈடுபட்ட தனபாலசிங்கம் (1988-11-04 அன்று) மரணமடைந்து விட்டார் தம்சொந்தச்சுகபோக நலன்களுக்காகச் சிங்கள எஜமான்களுக்கு விசுவாசமாகத் திட்டமிட்டுக்காட்டிக் கொடுப்புநடவடிக்கையில் ஈடுபட்ட பேரின்பநாயகம், தாமோதரம்பிள்ளை ஆகியோருக்கு மரணதண்டனை வழங்கப்படுகின்றது அத்துடன் தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுச் சிறிலங்கா அரசுக்குத் துணை போன யோசெப். இராமலிங்கம், சமூக விரோத நடவடிக்கைகளான பாலியல் வன்முறை, (1981-ம் ஆண்டு குடத்தனை வைத்தியசாலையில் பெண்களை பாலியல் வன்முறைக்குள்ளாக்கியமை) கொள்ளை போன்றவற்றில் ஈடுபட்ட செல்லத்தம்பி ஆகியோருக்கும் எம்மால் மரணதண்டனை வழங்கப்படுகின்றது

நீண்ட காலத்துக்கு முன்னைய காட்டிக்கொடுப்பிற்கு ஏன் இன்று தண்டனை வழங்கப்படவேண்டும்? போராட்டம் பெருமளவிலான வளர்ச்சியடையாத காலகட்டக் காட்டிக்கொடுப்பிற்கு மன்னிப்புவழங்கமுடியாதா? என்பனபோன்ற சில கேள்விகள் எம்மிடம் முன்வைக்கப்பட்டன.

தாய் நாட்டைக் காட்டிக் கொடுத்து எம் மக்களுக்கு எதிரான துரோக நடவடிக்கையில் ஈடுபடும் ஒருவனுக்கு 'காலம்' என்பது ஒரு பாதுகாப்புக் கவசமாக அமைந்து விடமுடியாது அதேபோல் எமது விடுதலைப் போராட்டத்தின்ஆரம்பகாலக்காட்டிக்கொடுப்பானது எம்மை ஒட்டுமொத்தமாக அழித்தொழிப்பதற்கான சதி நடவடிக்கையாகும்.

இன்று பெருவிருட்சமாக வளர்ச்சியடைந்திருக்கும் எமது விடுதலை வித்து, சிறு அரும்பாக முளைவிட்ட காலத்தில் நசுக்கி, வேரோடு அழித்துவிட நினைத்தவர்களை எங்ஙனம் மன்னிப்பது?

பலர் இராணுவ உளவாளிக

### தனியார்

படாது கூட்டுறவுச் சங்கங்களுக்கே விநியோகிக்கப்பட்டுவந்தது தெரிந்ததே தற்போது போதியளவு கையிருப்பு இருப்பதால் இவ்வுணவுப்பொருள்களைப் பெற்று விநியோகிக்க விரும்பும் வர்த்தகர்கள் இன்று முதல் யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பிரிவில் விற்பனைக் கட்டளையை சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றுமுதல் தனியார் வர்த்தக நிலையங்கள் முதற்கட்டமாக அரிசி, மா ஆகிய இரு அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் புனர்வாழ்வுப் பிரிவில் பெற்றுப் பொது மக்களுக்கு விற்பனை செய்யலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ச[

### இராணுவ

தச் செயல்களில் ஈடுபடுவதாகப் பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அதே வேளை அவர்களிடம் ஆயுதங்களும், வெடிபொருள்களும் இருப்பதும் அண்மைய கைதுகளில் இருந்தும் தெரியவந்துள்ளது.

கடந்த மூன்றுமாத காலப் பகுதியில் மாத்தளைப் பொலிஸ் பிரிவில் மட்டும் இத்தகைய இருபது கைதுகள் இடம்பெற்றுள்ளதாக அறிய வருகிறது

இதேவேளை கொள்ளைகள், ஆட்கடத்தல் போன்றவற்றுடன் தொடர்புடையவர்களாக தற்பொழுது இராணுவத்தில் சேவையிலுள்ள பலர் இருப்பதும் அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் உட்பட 27 பேர் இத்தகைய சம்பவங்களில் ஈடுபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இவ்வாறான நிலைமைகளினால், அண்மைக் காலத்தில் இராணுவத்தின் அமைப்பில் கட்டுப்பாடும், ஒழுக்கமும் சீர் குலைந்துள்ளது இதனால் இராணுவ ரீதியாகப் புலிகளைத் தோற்கடித்து வடக்கு-கிழக்கில் அரசின் அதிகாரத்தை நிலை நாட்டுவது என்பது பலத்த பின்னடைவுகளுக்கு உள்ளாகக் கூடும் என சண்டே ஐலண்ட் தெரிவிக்கிறது.

செய்யப்படுகின்றனர். இவர்கள் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று உறவினரால் கூட அறியமுடிவதில்லையாம்.

சில தினங்களுக்கு முன்னர் ஓமந்தை கொத்தணி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த தயாபரன் என்ற மாணவன் மேற்படி உளவாளிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேயாடி கூழாங்குளம் இராணுவ சோதனை முகாம் பகுதியில் கைது செய்யப்படும் தமிழ் பொதுமக்களின் தொகை அதிகரித்துள்ளது.

இதன் காரணமாகவவுனியா நகரப்பகுதி செல்வோரின் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

## தொழிற்சாலை திறப்பு

அறவழி போராட்டக் குழுவினால் நிர்வகிக்க இருக்கும் பிஸ்கட் தொழிற்சாலை ஒன்றினை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரியான ஜீன் பொன்சுவாஸால் நாளைதிறந்துவைக்கப் படவுள்ளது.

### புலிகளின்

வெல்வதே இறுதியான இலட்சியமாகக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

இராணுவத்தில் முக்கியமான விஷயங்களில் ஒன்றான கட்டுப்பாடு 1992 இல் தனிப்பட்ட கூட்டுக் கட்டுப்பாடு என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றினை விருப்பத்துடனும், கீழ்ப்படிவுடனும் படைகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா கேட்டுள்ளார்.

வடக்கிலும், கிழக்கிலும் கடினமான தொரு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அரசுப் படைகள் நடப்பாண்டில் நிர்வகித்தல் தலைமைத்துவம் கட்டுப்பாடு ஆகிய பண்புகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்றும் அந்தக் கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தக் களத்தில் புலிகளை வெல்வதற்கு இடசங்கற்பமும் கட்டுப்பாடும் சிறிலங்கா படைகளுக்கு அவசியம் என்றும் வற்புறுத்தப் படுகிறது.

மேற்படி விஷயங்கள் அடங்கிய கையேடுகள் அண்மையில் இராணுவ அதிகாரிகளிடையே விநியோகிக்கப் பட்டன.